සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය

நலன்புரி நன்மைகள் சபை

**WELFARE BENEFITS BOARD**

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
## பதவி வெற்றிடங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையில் பின்வரும் பதவி வெற்றிடத்திற்கு தகைமையும் அனுபவமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **கொழும்பு தலைமையகத்தில் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.**

| | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | **உதவி நலன்புரி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்) (MM 1-1 – தரம் II)** | 01 | **<u>தகைமைகள் மற்றும் அனுபவங்கள்</u>**<br>**<u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 )</u>**<br>1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், மென்பொருள் பொறியியல் அல்லது குறித்த பதவிக்கு நேரடித் தொடர்புடைய விடயப்பரப்பின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.<br>**மற்றும்**<br>முதலாவது பட்டம் பெற்றதன் பின்னராக , குறித்த பதவிக்குத் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு (01) வருட காலத் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும், தேசிய தொழல்சார் தகைமை (NVQ) நிலை 7-க்கு குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>**மற்றும்**<br>அரசாங்க சேவை, கூட்டுத்தாபனம், சட்டபூர்வமான சபை/நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில், குறித்த துறையில் குறைந்தது ஒரு (01) வருட காலத் தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**<u>உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழே 1 அல்லது 2)</u>**<br>1. மேலே வெளிவாரி விண்ணப்பதரர்களுக்கு கோரப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. பதவிக்குத் தொடர்புடைய துறையில், இளநிலை முகாமைத்துவ (JM) பிரிவில் உள்ள பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | **சம்பள அளவுத்திட்டம் :** *ரூ. 91,690 – 10 × 2,480 – 15 × 3,450 – 168,240 (MM 1-1)*<br><br>**சம்பளப் படிமுறை:** *ரூ. 81,710/-*<br>***(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2025 இன் 2026.01.01 ஆம் திகதிய அட்டவணை II இன் படி)***<br><br>*(அரசின் அங்கீகரிக்கப்பட்ட படிகள் திறைசேரி சுற்றறிக்கையின் படி தொடர்பாடல் வசதிகள் உரித்தாகும்)* |

**வயதெல்லை -**

***உதவி நலன்புரி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்)***

*22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதரர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.*

***பொது நிபந்தனைகள்:***

- *நேர்முகப்பரீட்சையில் பெறுகின்ற அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.*

- *இப் பதவி நிரந்தரமானது. பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னராக 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படும்.*

***மாதாந்த ஊதியம்:***

- *MM 1-1-2025 ரூ. [91,690 – 10 x 2,480 - 15 x 3,450 – 168,240] + அரசு அங்கீகரிக்கப்பட்ட படிகள் , அத்தோடு தங்களது சம்பளத்தில் 8% ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிக்க வேண்டும், அத்துடன் நலன்புரி நன்மைகள் சபை 12% அரச பங்களிப்பாக செலுத்துவதோடு. மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% பங்களிப்பும் செலுத்தப்படும் .*

- *விண்ணப்பப்படிவத்தை பின்வரும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும்:*
  - http://www.treasury.gov.lk/web/ministry-of-finance/vacancies
  - https://www.wbb.gov.lk/web/si/jobs

- *பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம், **தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.05.11** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு **ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை, ஜே.ஆர். ஜயவர்தன மத்திய நிலையம், இல. 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 07** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

- *அரசாங்க /கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கும், பூரணமற்ற அல்லது இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்*

- *இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்துதல், மாற்றியமைத்தல் அல்லது விண்ணப்பதாரிகளை சுருக்க பட்டியறப்படுத்தல் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளரின் தீர்மானமே இறுதியானதாக கருதப்படும்.*

***ஆணையாளர்***
***நலன்புரி நன்மைகள் சபை***
***நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு***